**இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் கொடுக்கல் வாங்கல் தொடர்பான அறிக்கை - 2024**

---

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் சம்பந்தமான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கும் தரப்பினரினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சுய வருமானம், செலவினம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய முறைப்படி பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். அந்த அதிகாரச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு கணக்காய்வு செய்யப்படுகின்ற் நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், சட்ட விதிகளின் மூலம் காண்பிக்கின்ற வகையில் காலஎல்லையில் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அந்த அதிகாரச் சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேர காலத்தில் தயாரிப்பதை உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கணக்காணித்துக் கொள்ளல் வேண்டும்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை தொடர்பான செயற்பாட்டுக் கையேட்டின் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களும் வரைபு ஆண்டறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2025 திசெம்பர் 15 ஆந் திகதி வரை 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு ஐய வினாவில் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக இணங்கி கொள்ளப்படுவதுடன் 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தற்பொழுது கணக்காய்வு நடவடிக்கைகளுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டிலிருந்து 2024 ஆம் ஆண்டு வரையான வரைபாக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் நிதிக்கூற்றுக்களையும் வரைபு ஆண்டறிக்கையையும் தயாரித்து கணக்காள்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |

## 2.2 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் காணப்படுதல்

கூட்டுத்தாபனத்தினால் இறுதியாகத் தயாரித்துச் சமர்ப்பித்த 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் காட்டப்படுகின்ற சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள், செலவுகள் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

| | **2019** | **2020** |
|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** |
| நடைமுறையற்ற சொத்துக்கள் | 1,513,191,452 | 1,470,060,885 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 403,239,918 | 566,085,703 |
| | .................... | ...................... |
| முழுச் சொத்துக்கள் | 1,916,431,370 | 2,036,146,588 |
| | .................... | ......................... |
| உரிமையாண்மை | 203,149,703 | 34,701,398 |
| நடைமுறையற்ற பொறுப்புக்கள் | 718,549,156 | 893,451,537 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 994,732,511 | 1,107,993,652 |
| | .................... | ....................... |
| முழு உரிமையாண்மையும் பொறுப்புக்களும் | 1,916,431,370 | 2,036,146,588 |
| | .................... | .................... |
| வருமானம் | 3,041,791,819 | 3,000,237,089 |
| செலவுகள் | (3,205,271,444) | (3,140,992,219) |
| | ................... | .................. |
| வரிக்குப் பின்னர் இலாபம் / (நட்டம்) | (163,479,625) | (140,755,130) |
| | ...................... | ...................... |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் 15 ஆம் பிரிவு | தொழில் தருனரினால் ஒவ்வொரு ஊழியரின் பங்களிப்பு பணத்தை அந்த ஊழியரின் உழைப்பிலிருந்து கழித்து அடுத்துவரும் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய போதிலும் | நிறுவனத்தினால் காணப்பட்ட நிதிச் சிக்கல்களின் காரணமாக கணக்காய்வில் காட்டப்பட்டுள்ளவாறு நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் இந்நிதியினை செலுத்துவதற்கு முடியாதிருந்ததுடன் | ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் முறைப்படியாக உரிய வேளைக்கு பங்களிப்பு பணத்தை செலுத்துதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கூட்டுத்தாபனத்தினால் ஊழியர் சேமலாப நிதியினை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் செலுத்தாததன் காரணமாக 2025 ஆகஸ்ட் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஊழியர் சேமலாப நிதி மற்றும் அந்த மிகைக் கட்டணமாக ரூபா 700,641,706 இனை செலுத்த வேண்டி இருந்தது. மேலும் கூட்டுத்தாபனத்தினால் 2024 ஆம் ஆண்டின் போது ஊழியர் சேமலாப மிகைக் கட்டண செலவாக ரூபா 23,671,197 செலுத்தப்பட்டிருந்தது. | ஊழியர் சேமலாப நிதி, செலுத்தப்படாத பணிக்கொடை மற்றும் நிலுவையான வரிப் பணம் என்பவற்றை தீர்த்துவைப்பதற்காக பொதுத்திறைசேரியிடம் மேலதிக நிதி ஏற்பாட்டினை வழங்குமாறு செயலாளரின் மூலம் தற்பொழுது வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு அதிகாரச்சட்டத்தின் II ஆம் பகுதியின் 5(i) ஆம் உப பிரிவு | பணிக்கொடைக்கு தகமைபெறும் எந்தவொரு ஊழியரும் விலகிச்செல்லும் போது 30 நாட்களுக்குள் அந்த தகமை பெறுகின்ற பணிக்கொடை பணம் செலுத்தப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனம் அதற்கிணங்க கொடுப்பனவு செய்யாமையின் காரணமாக 2025 ஆகஸ்ட் 31 ஆந் திகதியில் செலுத்த வேண்டிய பணிக்கொடை மீதி ரூபா 20,674,616 மற்றும் அதன் மிகைக் கட்டணம் ரூபா 6,354,424 ஆக இருந்தது. இது சம்பந்தமாக தொழில் திணைக்களத்தின் மூலம் கொழும்பு நீதவான் நீதி மன்றத்தில் 84364/5/23 ஆம் இலக்கத்தின் கீழ் ஒரு வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. | பொதுத் திறைசேரியிடமிருந்து மேலதிக நிதி ஏற்பாட்டினை பெற்ற உடன் இக்கொடுப்பனவினை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | பணிக்கொடை கொடுப்பனவு அதிகார்ச சட்டத்தின் பிரகாரம் செலுத்த வேண்டிய பணிக்கொடையைய செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2022 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டத்தின் (திருத்திய) 26 ஆம் பிரிவு | குறித்த வரி அறவிடக் கூடிய காலப்பகுதி சம்பந்தமான வரியானது அந்த வரி அறவிடக்கூடிய காலப்பகுதி முடிவடைந்ததன் பின்னர் அடுத்துவரும் மாதத்தின் 20 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டிய போதிலும் 2025 மே 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்தப்படாத பெறுமதி சேர் வரிக் கடப்பாடு ரூபா 19,696,372 ஆகும். | நிறுவனத்தில் காணப்பட்ட நிதிச் சிக்கலின் காரணமாக உரிய வேளைக்கு வரிக்கடப்பாட்டினை அனுப்பிவைக்க முடியாதிருந்ததுடன் பொதுத் திறைசேரியிடம் நிதி ஏற்பாட்டினை வழங்குமாறு வேண்டிக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த மேலதிக நிதி ஏற்பாடு கிடைத்த உடன் இக்கொடுப்பனவை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் பெறுமதி சேர் வரிப் பணத்தை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தை கட்டியெழுப்புதல் வரி அதிகாரச் சட்டத்தின் 04 ஆம் பிரிவு | தேசத்தை கட்டியெழுப்புதல் வரியானது உரிய காலாண்டு முடிவடைந்ததன் பின்னர் அடுத்துவரும் மாதத்தின் 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் 2025 மே 31 ஆந் திகதியன்று செலுத்தப்படாத அந்த வரிக் கடப்பாடு ரூபா 85,169,312 ஆகும். | நிறுவனத்தில் காணப்பட்ட நிதிச் சிக்கல்களின் காரணமாக உரிய வேளைக்கு வரிக் கடப்பாட்டினை செலுத்த முடியாதிருந்ததுடன் பொதுத்திறைசேரியிடம் நிதி ஏற்பாட்டினை வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இந்த மேலதிக நிதி ஏற்பாடு கிடைத்த உடன் இக்கொடுப்பனவை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | தேசத்தை கட்டியெழுப்புதல் வரிப் பணத்தை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 18(4) ஆம் பிரிவு | கணக்காய்வு செய்யப்படும் ஒரு நிறுவனத்தினால் கணக்காய்வு கட்டணத்தினை இன்வொயிசிலுள்ள திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தி தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் 2013 ஆம் ஆண்டிலிருந்து 2024 ஆம் ஆண்டு வரை | நிறுவனத்தில் காணப்பட்ட நிதி சிக்கலின் காரணமாக கணக்காய்வுக் கட்டணத்தை உரிய வேளையில் செலுத்துவதற்கு முடியாதிருந்ததுடன் எதிர்வரும் காலங்களில் இந்த நிலுவையான கணக்காய்வு கட்டணத்தை நிதி நிலைமை நல்ல | தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் கணக்காய்வு கட்டணத்தை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் செலுத்துதல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | கூட்டுத்தாபனத்தினால் செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணம் ரூபா 7,344,660 ஆகும். | நிலைமைக்கு வந்த உடன் செலுத்தி பூர்த்தி செய்வதற்கு முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது. | |
| (ஊ) | 2006 பெறுகை வழிகாட்டிக் கோவை | | | | |
| | (i) | 4.2.1 ஆம் பந்தி | ஆகக் குறைந்தது 03 ஆண்டுகள் காலத்திற்கு எதிர்பார்த்த பெறுகை நடவடிக்கைகளை உள்ளடக்கி பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தினால் 2024 காலப்பகுதிக்காக அவ்வாறான திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வில் காட்டப்பட்டுள்ளவாறு எதிர்வரும் காலங்களின் போது கவனம் செலுத்தி அதற்கிணங்க நடவடிக்கை எடுப்பதற்கு முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| | (ii) | 4.2.2 ஆம் பந்தி | கூட்டுத்தாபனத்தினால் 2024 ஆம் ஆண்டிற்காக ஒவ்வொரு பெறுகை நடைமுறையின் கட்டங்களையும் காலரீதியாக விபரிக்கின்ற பெறுகை கால அட்டவணை தயாரிக்கப்படவில்லை. | கணக்காய்வில் காட்டப்பட்டுள்ளவாறு எதிர்வரும் காலங்களில் கவனம் செலுத்தி அதற்கிணங்க நடவடிக்கை எடுப்பதற்கு முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகை கால அட்டவணையினைத் தயாரித்தல் வேண்டும். |
| (எ) | 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | | நிதியற்ற சொத்துக்களை ஆவணப்படுத்துதல் சம்பந்தமாக 2024 ஆம் ஆண்டு தொடர்பாக கணக்கு தணிக்கையாளர் நாயகத்திற்கு அறிக்கையிடப்படவில்லை. | எதிர்வரும் காலங்களில் உரிய அறிக்கையை கணக்கு தணிக்கையாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பேன். | சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் சொத்துக்களை ஆவணப்படுத்தி அறிக்கையிடுதல் வேண்டும். |
| (ஏ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் | | நிதி ஆண்டு முடிவடைந்து 05 மாதங்களுக்குள் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையினை பாராளுமன்றத்தில் முன்வைக்க வேண்டிய போதிலும் 2019 ஆம் | 2019 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையானது அமைச்சரவை அங்கீகாரத்திற்காக அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை | அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் செயற்பாட்டு கையேட்டின் பிரகாரம் ஆண்டறிக்கை |

| | | | |
|---|---|---|---|
| சுற்றறிக்கையில் குறிப்பிட்ட செயற்பாட்டு கையேட்டின் 6.6 ஆம் பந்தி | ஆண்டிலிருந்து 2024 ஆம் ஆண்டு வரையான ஆண்டுகள் தொடர்பான ஆண்டறிக்கை 2025 யூன் 25 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | தயாரிக்கப்பட்டு வருகின்றது. | பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 2022 நவம்பர் மாதம் 25 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்தின் போது கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த பின்வரும் சிபாரிசுகள் சம்பந்தமாக கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்தீருக்கவில்லை. | | |
| (i) கடன் மீதியை அறவீடு செய்வதற்காக பொருத்தமான நடைமுறையினைத் தயாரித்து கடனை அறவீடு செய்யும் நடவடிக்கையினை பின்தொடர் நடவடிக்கை எடுக்குமாறும் அதன் செயல்முன்னேற்றத்தினை 03 வாரங்களுக்குள் அறிக்கையிடுமாறும் குழுவினால் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. | பலவீனமான மட்டத்தில் காணப்பட்ட கடனை அறவீடு செய்வதற்காக பொலிசில் முறைப்பாடு செய்தல் மற்றும் சட்ட நடவடிக்கை எடுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கிணங்க தற்பொழுது பழைய கடன் மீதிகள் அறவிடப்பட்டு வருகின்றது. கடற்றொழில் அமைச்சின் தலைமையில் தொழில் முயற்சி வளங்கள் திட்டமிடல் முறைமையினை (Enterprise Resource Planning - ERP) எங்கள் நிறுவனத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருவதுடன் தற்பொழுது ஒத்திகை நிகழ்சித்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டு வருகின்றது. | அறவிட வேண்டிய கடன் மீதியை அறவீடு செய்வது சம்பந்தமான ஒரு நடைமுறையினைத் தயாரித்து துரிதமாக கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் | இன்று வரை 2025 யூன், யூலை, ஆகஸ்ட் ஆகிய | நிலுவையான பங்களிப்பு பணத்தை |

| | | | |
|---|---|---|---|
| | பங்களிப்பு பணம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்பு பணத்தை மாதாந்தம் அல்லது வருடாந்தம் செலுத்தமாறு மற்றும் நிலுவையான பங்களிப்பு பண மீதியை செலுத்துவது சம்பந்தமாக அமுல்ப்படுத்தக்கூடிய மற்றும் நடைமுறைப்படுத்தக்கூடிய நடைமுறைகளை தயாரித்து 02 வாரங்களு க்குள் பொது முயற்சிகள் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சிபாரிசு செய்யப்பட்டது. | மாதங்களுக்குரிய ஊழியர் சேமலாப நிதி செலுத்தி பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் பொதுத் திறைசேரியிடம் வேண்டிக்கொள்ளப்பட்ட நிதிஏற்பாட்டுப் பணத்தை பெற்ற உடன் இந்த நிலுவையாக உள்ள மீதிகளை செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. 2025 மே 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 3,078,575 பணம் (ஊழியர் நம்பிக்கைப் பொறுபாப்பு நிதியத்தின் பங்களிப்பு பணமும் மிகைக் கட்டணமும்) தற்பொழுது செலுத்தி முடிவடைந்துள்ளது. | செலுத்துவது சம்பந்தமாக அமுல்ப்படுத்தக்கூடிய சாத்தியமான நடைமுறைகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஊழியர் சேமலாப நிதியத்தில் 2025 ஆகஸ்ட் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 700,641,706 பங்களிப்பு பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு நிறைவேற்றுனரினால் மீன்களை கொள்வனவு செய்து விற்பனை செய்வதற்காக அந்த ஒவ்வொரு நிறைவேற்றுனர்களுக்குச் சொந்தமான கடைகளுக்கு வழங்கப்படுவதுடன் அக்கடைகளால் மீன்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் பணம் உரிய நிறைவேற்றுனர்களுக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் உரிய கடைகளுக்குப் பொறுப்பானவர்களினால் அப்பணத்தை முறைப்படியாக அனுப்பிவைக்காமையின் காரணமாக 17 நிறைவேற்றுனர்கள் தொடர்பாக 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய பெறுமதி ரூபா 36,208,268 ஆக இருந்தது. | 2024-12-31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட உள்ளக, வெளியக மற்றும் வைத்தியசாலைகள் கடன்பட்டோர் மீதிகள் தொடர்ச்சியாக அறவிடப்பட்டு வருகின்றது என தெரிவிக்கிறேன். | மீன் விற்பனையின் மூலம் பெற்ற பணம் கடைக்குப் பொறுப்பானவர்களால் தங்களின் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக பயன்படுத்துவதனை தவிர்க்க வேண்டியதுடன் அப்பணம் நிலுவையாக உள்ள கடைப் பொறுப்பாளர்களுக்கு எதிராக துரிதமாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதற்கும் அப்பணத்தை அனுப்பிவைப்பதற்கு முறையான ஒரு வேலைத் திட்டத்தினை துரிதமாக ஸ்தாபிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | வைத்தியசாலைகளினால் கட்டளையிடப்பட்ட கெலவலா மீன்களுக்குப் பதிலாக | வைத்தியசாலை வழங்கல்கள் ஆரம்பிக்கப்பட்ட | பழைய மீதிகளை துரிதமாக அறவீடு செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | இணக்கப்பாடின்றி கும்புலா மற்றும் அருக்குலா மீன்களை வழங்கியமைக்காக 25 வைத்தியசாலைகளிடமிருந்து 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடப்படாத ரூபா 2,494,656 மீதி ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய கடன் மீதியாகும். | நாளிலிருந்து காணப்பட்டு வரும் செயற்டபாடற்ற நிலைக்கு உருவாகியுள்ள கடன்பட்டோர் மீதிகளை அறவீடு செய்வதற்காக கூட்டுத்தாபனத்தினால் நிதி, பிரதி பொது முகாமையாளரின் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் பெறவேண்டியவைகளுக்குள் ரூபா 137,859,301 தொகையான செயற்பாடற்ற கடன் மீதி உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 05 ஆண்டுகளை மிகைத்த மீதி ரூபவா 91,824,450 தொகையும் 10 ஆண்டுகளை மிகைத்த மீதி ரூபா 34,154,417 தொகையும் ஆகும். அதற்கிணங்க பல ஆண்டுகளாகக் காணப்பட்ட இந்த மீதியை அறவீடு செய்வதற்கு கூட்டுத்தாபனம் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சேவையை விட்டுச் சென்றுள்ள ஊழியர்களுக்காக சட்ட பிரிவினூடாக தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றநது. வெளி கடன்பட்டோர் மீதியை அறவீடு செய்வதற்காக சட்ட பிரிவினால் அழைப்பாணை அனுப்புவதற்கு தற்பொழுது நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 137,859,301 ஆன கடன் மீதிகளை துரிதமாக அறவீடு செய்வதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீன்களை கொள்வனவு செய்வதற்காக வெளித்தரப்பினர்களுக்கு ரூபா 607,536,937.23 செலுத்த வேண்டிய மீதியானதுடன் இந்த மீதியில் இரண்'டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 162,015,002 ஆகும். அதற்கிணங்க இக்கடன்கொடுத்தோர் மீதியை தீர்த்துவைப்பது சம்பந்தமாக கூட்டுத்தாபனம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமை சிறப்பாக அமைந்ததன் பின்னர் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கால வீச்சினை கடந்துள்ள மீதிகளின் பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடுகிறேன். | மீதிகளை துரிதமாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2025 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இலங்கை வங்கி கடன் மீதி ரூபா 158,623,208 தொகையும் அத்திகதியில் செலுத்த வேண்டிய வட்டி மீதி ரூபா 98,005,988 தொகையும் | நிறு வனத்தில் காணப்பட்ட நிதிச் சிக்கலின் கபாரணமாக இந்த வங்கி கடன் பணத்தை செலுத்த முடியாதிருந்ததுடன் இது சம்பந்தமாக இலங்கை | வங்கி கடன் மீதிகளை துரிதமாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அத்திகதியில் வங்கி மேலதிகப் பற்று மீதி ரூபா 82,279,516 தொகையும் ஆகும். வங்கி கடனுக்காக திறைசேரி பிணை வைக்கப்பட்டிருந்ததுடன் இரண்டு மேலதிகப் பற்று வசதிகளுக்காக குளிரூட்டிகளுடனான 44 லொறிகள் மற்றும் எதுல்கோட்டே மற்றும் குருனாகல் கெட்டுவானவில் அமைந்துருள்ள 02 காணிகள் பிணையாக வைக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த வங்கி கடன் மற்றும் மேலதிகப் பற்று மீதியை நிர்ணயிக்கப்பட்டவாறு செலுத்தாமையின் காரணமாக நிலுவையாகக் காணப்பட்டது. | வங்கி முகாமைத்துவத்துடன் கலந்துரையாடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. தற்பொழுது இது சம்பந்தமான வேண்டுதல் கடிதம் கடற்றொழில் பிரதி அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| (எ) | 2015 ஆம் ஆண்டின் போது காலி ஐஸ் நிலையத்திலுள்ள அமுக்குதல், இயத்திரத்தின் உதிரிப் பாகங்கள் காணாமல் போனமை சம்பந்தமாக 2025 மே 31 ஆந் திகதி வரை நி.பி 103(இ) இன் பிரகாரம் பொறுப்புக்கூற வேண்டியவர்களை நிர்ணயித்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் ஐந்து ஆண்டுகளின் பின்னர் அதாவது 2022 மார்ச் 15 ஆந் திகதி பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. | பொலிசாரினால் 01150 ஆம் இலக்க வழக்கின் கீழ் காலி நீதவான் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. | நி.பி 103(இ) இன் பிகராரம் பரீட்சிப்புக்களை நடாத்தி இந்த நட்டத்திற்கு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களை நிர்ணயித்தல் வேண்டும். |
| (ஏ) | 2022 செப்தெம்பர் 16 ஆந் திகதி நடைபெற்ற 847 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் தீர்மானத்தின் பிரகாரம் ஊழியர் நிலுவைக் கடனை 03 மாதங்களுக்குள் உரிய ஊழியர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கும் கடன் பணத்தை செலுத்தாத ஊழியர்களின் சேவையை நிறுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தும் அது அமுல்ப்படுத்தப்பட்டிருக்காததுடன் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கிடைகக் வேண்டிய ஊழியர் கடன் பெறுமதி ரூபா 60,537,636 ஆகும். | ஊழியர் கடன்பட்டோர் மீதிகளை அறவீடு செய்வதற்காக தற்பொழுது சில ஊழியரிகளின் சேவை நிறுத்தப்பட்டு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களிடமிருந்து அறவீடு செய்ய வேண்டியுள்ள கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2025 மே 30 ஆந் திகதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனத்திடம் காணப்பட்ட 10 குளிர் காப்பகங்களில் தற்பொழுது 06 குளிர்காப்பகங்கள் மாத்திரம் செயற்படும் நிலையில் காணப்பட்டன. மேலும் கூட்டுத்தாபனத்திட்ம் காணப்பட்ட 14 குளிர்காப்பு கொள்கலன்களில் (கன்டேனர் பெட்டி) 05 மெட்ரிக் தொன்களைக் கொண்ட தலைமை அலுவலகத்திடம் காணப்பட்ட 07 கொள்கலன்கள் மாத்திரம் 2025 மே 30 ஆந் திகதியில் உள்ளவாறு செயற்படும் நிலையில் காணப்பட்டன. செயற்பாடற்ற நிலையில் காணப்பட்ட குளிர் காப்பகங்கள் பராமரிக்கப்படாமையின் காரணமாக தனியார் வழங்குனர்களிடமிருந்து குளிர்காப்பு கொள்கலன்கள் மற்றும் குளிர் காப்பகங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்காக 2020 ஆம் ஆண்டிலிருந்து 2025 மே 31 ஆந் திகதி வரை கூட்டுத்தாபனத்தினால் ரூபா 29,841,599 செலவு செய்யப்பட்டிருந்தது. | குளிர் காப்பகம் மிகவும் பழைமை வாய்ந்ததாகும். அந்த குளிர்காப்பகங்களை திருத்தம் செய்தலும் மிகவும் சிக்கலானதுடன் கொள்கலன் பெட்டிகளும் துருப்பிடித்துள்ளன. மேலும் இந்த குளிர்காப்பகங்களின் வெப்ப நிலையை - 20 செல்சியஸ் டிக்ரி ( - 20$^{o}$ C) இற்கு குறைப்பது சிக்கலானதாகும். சாதாரணமாக எங்களால் திருத்தம் செய்யப்பட்ட குளிர் காப்பகம் உச்ச அளவாக செல்சியஸ் டிக்ரி -7 இற்கும் - 8 இற்கும் இடையே காணப்பட்டது. எனவே மீன்களை களஞ்சியப்படுத்தி நிர்ணயிக்கப்பட்ட நியமத்தில் பேணுவதற்கு வெளியிலிருந்து குளிர் காப்பகங்களை வாடகைக்கு பெறவேண்டியிருந்தது. - 20 செல்ஸியஸ் டிகிரி 200 மெ.தொன் குளிர் காப்பகம் மற்றும் 20 செல்சியஸ் டிகிரி 2.5 மெ.தொன் அதரிகூடிய குளிர் காப்பகம் ஒன்றினை கூட்டுத்தாபனத்தில் ஸ்தாபிப்பதற்கு கடற்றொழில் அமைச்சிடமிருந்து ரூபா 86 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. | செயற்பாடற்ற நிலையில் காணப்படும் குளிர்காப்பு காப்பகங்களை முறையான நடைமுறையின் மூலம் பராமரித்து பயன்படுத்துவதற்கு நடவடிககை எடுத்துக்கொள்ள வேண்டும். |
| (ஆ) | மீன்களை செயன்முறைப்படுத்தும் அலகினை நிர்மாணிப்பதற்காக 2017 ஆம் ஆண்டில் மானியமாக கிடைத்த ரூபா 65,000,000 இல் ரூபா 36,869,598 நிறுவனத்தின் செலவுகளுக்காக செலவு செய்யப்பட்டிருந்தது. மிகுதியான ரூபா 28,130,402 | கணக்காய்வில் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பதாக இணங்கிக் கொள்ளப்படுவதுடன் இந்த விடயங்களை முகாமைத்துவத்திற்கு அனுப்பிவைத்து தேவையான அறிவுறுத்தல்களின் பிரகாரம் எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுப்பேன். | உரிய சொத்துக்கள் சம்பந்தமாக மீண்டும் மீளாய்வு செய்து பணிப்பாளர் சபைக்கு அனுப்பிவைத்து அதற்காக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மானியம் அலுவலக வளவிலுள்ள மீன்களை செயன்முறைப்படுத்தும் அலகினை நிர்மாணிப்பதற்காக செலவு செய்யப்பட்டிருந்தும் பின்னர் அது கைவிடப்பட்டதுடன் தற்பொழுது அது அழிவடைந்து காணப்படுவதன் காரணமாக அச்செலவு விளைவற்ற செலவாக இருந்தது. | | |
| (இ) | டின் மீன் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கும் நோக்கத்தில் ஒரு ரஸ்ய கம்பனியுடன் 2003 ஆம் ஆண்டில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட கூட்டு தொழில்முயற்சிக்காக கூட்டுத்தாபன பங்களிப்பாக தலைமை அலுவலக வளவில் அமைந்துள்ள 1½ ஏக்கர்களைக் கொண்ட ஒரு காணி ரூபா 110,000,000 பெறுமதிக்கு விற்பனை செய்து உறுதியின் மூலம் தனியார் கம்பனியில் 1,100,000 பங்குகளாக முதலீடு செய்யப்பட்டிருந்தது. இன்றுவரை டின் மீன் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் கூட்டுத்தாபனத்தினால் கம்பனிக்கு ஒப்படைத்த காணியை சட்டரீதியாக மீண்டும் கூட்டுத்தாபனத்தினால் பொறுப்பேற்பதந்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. | கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட DLM/15/2018 ஆம் இலக்க வழக்கு 2025-10-29 ஆந் திகதி விடயத்தை உறுதிப்படுத்துவதற்காக கோரப்பட்டது. 2025-12-17 ஆந் திகதி ஒரு குற்றப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு மீண்டும் விடயத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கோருவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | திருகோண்மலை மீன் வியாபார கட்டிடத் தொகுதியில் 46 மீன் விற்பனை பலகைகள் வெளிதரப்பினர்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2025 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை வெளிதரப்பினர்களிடமிருந்து அறவிட வேண்டிய வாடகைப் பணம் ரூபா 6,333,695 தொகையும் 2024 செப்தெம்பர் | திருகோணமலை மீன் வியாபார கட்டிடத் தொகுதியில் அறவீடு செய்ய வேண்டியிருந்த நிலுவையான மீன்விற்பனை பலகை வாடகை மற்றும் தண்ட வட்டிப் பணத்தை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை தற்பொழுது சட்டப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு | அறவிட வேண்டிய வாடகைப் பணத்தை அவீடு செய்வதற்குசும் செலுத்த வேண்டிய நிலுவை வாடகையை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 30 ஆந் திகதி வரை மேற்கூறிய நிலுவை வாடகைக்காக அறவிட வேண்டிய தண்டப்பண வட்டி ரூபா 46,619,571 ஆகும். அவ்வாறே மீன் வியாபார கட்டிட தொகுதி நிர்மாணிக்கப்பட்டுள்ள காணி திருகோணமலை நகரசபைக்குச் சொந்தமானது என்பதனால் தேறிய வருமானத்தில் 30 சதவீதம் திருகோணமலை நகரசபைக்கு கொடுப்பனவு செய்ய வேண்டிய போதிலும் 2014 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரை ரூபா 2,001,900 நகரசபைக்கு கொடுக்க வேண்டியிருந்தது. | வருவதுடன் திருகோணமலை நகரசபைக்கு செலுத்த வேண்டியிருந்த பெறுமதியில் ரூபா 200,000 செலுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க இன்னும் ரூபா 1,801,900.00 நகரசபைக்கு செலுத்த வேண்டியுள்ளது. | |
| (உ) | விற்பனை கடைகளை ஆரம்பிக்கும் நோக்கத்தில் உரிய பிரதேசத்தில் மீன் விற்பனை தொடர்பான சந்தை மீளாய்வினை மேற்கொள்ளாது விற்பனை கடைகளை ஆரம்பித்ததன் காரணமாக 2020 ஆம் ஆண்டிலிருந்து 2024 ஆம் ஆண்டு வரை ஆரம்பிக்கப்பட்ட விற்பனை கடைகளுடன் ஒப்பிடுகையில் 75 சதவீதம் அளவானற்றை மூடவேண்டி ஏற்பட்டிருந்தது. | விற்பனை கடைகளை ஆரம்பித:து செயற்படுத்தி வருகையில் தனியார் விற்பனை கடைகள் அதற்கு அருகாமையில் ஆரம்பிக்கப்பட்டு தரம் குறைந்த மீன்கள் குறைந்த விலைக்கு விற்பனை செய்ததன் காரணமாக கூட்டுத்தாபனத்தின் விற்பனை வீழ்ச்சியடைந்ததனைப் போல உரிய பிரதேசத்திலுள்ள உள்ளூராட்சி நிறு வனங்களினால் விற்பனை கடைகளை மூடுவதற்கு கட்டளை வழங்குதலும் பிரதான சிக்கலாக உள்ளது. இதற்காக அங்கீகரித்த நடைமுறையை உள்ளடக்கி ஒரு அறிக்கையினைத் தயாரித்து அது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டதன் பின்னர் எதிர்வரும் காலங்களில் விற்பனை கடைகளை ஆரம்பிக்கும் போது அந்த நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | சந்தை மீளாய்வினை மேற்கொண்டு அதற்கிணங்க புதிதாக விற்பனை கடைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2025 மே 30 ஆந் திகதி தயாரித்த வாகன பட்டோலைக்கு இணங்க ஓடும் நிலையில் காணப்படாத 22 வாகனங்களும் கைதவிர்ப்புச் செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட 17 வாகனங்களும் மற்றும் தகவல்களை வழங்க முடியாத 16 வாகனங்களும் காணப்பட்டன. | கடற்றொழில் அமைச்சின் ஒரு பிரதிநிதி கேள்வி மனுக்களை மதிப்பீடு செய்யும் குழுவிற்கு நியமிப்பதற்காக எழுத்துமூல வேண்டுதல் அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அமைச்சின் பிரதிநிதி நியமிக்கப்பட்ட உடன் இந்த நடைமுறையை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | கைதவிர்ப்புச் செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட வாகனங்களை துரிதமாக கைதவிர்ப்புச் செய்ய வேண்டியதுடன் ஓடும் நிலையில் காணப்படாத வாகனங்கள் சம்பந்தமாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மேலும் தகவல்கள் இல்லாத வாகனங்கள் சம்பந்தமாக துரிதமாக கணக்காய்விற்கு தகவல்களை வழங்குதல் வேண்டும். |
| (ஆ) | நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் காணப்படுகின்ற டீசல் நிரப்பு நிலையம் தற்பொழுது செயற்படுத்துப்படாததுடன் அதற்கு இறுதியாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திடமிருந்து 2023 யூலை 13 ஆந் திகதி டீசல் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அதன் டீசல்களை வழங்கும் நடவடிக்கை 2023 செப்தெம்பர் 08 ஆந் திகதி நிறுத்தப்பட்டதுடன் டீசல் நிரப்பு நிலையம் தற்பொழுது துருப்பிடித்து காணப்படுகின்றது. | மீண்டும் தலைமை அலுவலகத்தில் டீசல் நிரப்பு நிலையத்தினை செயற்படுத்துவதற்காக இலங்கை பெற்றோலியக கூட்டுத்தாபனத்திற்கு இந்த டீசல் நிரப்பு நிலையத்தின் தரத்தினை பரீட்சித்தலினை மேற்கொள்ளுமாறு வேண்டுதலினை விடுத்துள்ளதுடன் அதற்கிணங்க ஒரு உத்தியோகத்தர் வருகைதந்து எரிபொருள் தாங்கியினை பரீட்சித்துப் பார்த்து அது சம்பந்தமான தரப்பரிசோதனை அறிக்கையினைப் பெற்று க்கொள்வதற்கு உரிய வெளிவாரி வழங்குனரின் பெயர் எங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க துரிதமாக | டீசல் நிரப்பு நிலையத்தினை மீண்டும் செயற்படுத்துதலானது துரிதமாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | இந்த வழங்குனரின தரப்பரிசோதனை அறிக்கையைப் பெற்று க்கொள்வதற்கு எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |

**3.4 மனிதவளங்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2025 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரித்த ஆளணியினருக்கு இணங்க செயற்பாட்டு நடைமுறைகள் மற்றும் அதன் செயலாற்றல் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும் கூட்டுத்தாபனத்தின் ஆளணியினரின் பிரதான பதவியாகிய பொது முகாமையாளர் பதவி மற்றும் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான சிரேஷ்ட மட்டத்திலுள்ள 15 பதவிகளில் 25 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவற்றில் 13 பதவி வெற்றிடங்களை 2019 ஆம் ஆண்டிலிருந்து பூரணப்படுத்துவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 31 பதவிகள் சம்பந்தமாக அரசாங்க சேவையின் ஆட்சேர்பபு நடைமுறையினை மீளாய்வு செய்தல் மற்றும் ஆளணியினரை முகாமைத்துவம் செய்தல் தொடர்பாக பிரதம மந்திரியின் அலுவலகத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் 30 பதவிகளுக்காக அங்கீகாரம் கிடைத்துள்ளது. அவற்றிற்கு மத்தியில் 08 பதவிகளுக்காக மாத்திரம் பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டு உரிய ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் ஏனைய பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைக ளை மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | அத்தியவசியமான பதவிகளின் வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2025 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரித்த ஆளணியில் உள்ளடக்கப்பட்ட பதவி வகிப்பவர்களுக்கு தனிப்பட்ட வகையிலான 07 பதவிகளிலுள்ள 63 ஊழியர்களைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் மூன்றாம் மட்டத்திலுள்ள 16 பதவிகளில் 36 ஊழியர் வெற்றிடங்களும், இரண்டாம் | அங்கீகரித்த ஆளணியினர் 724 என்பது திருத்தம் செய்யப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தும் இன்று வரை அங்கீகரித்த ஆளணியினர் 660 என்பதாக அவ்வப்போது குறிப்பிடப்பட்டுள்ளதனால் அங்கீகரித்த எண்ணிக்கை 724 ஆக திருத்தம் செய்யப்படுதல் வேண்டும். உள்ளபடியான ஆளணியினரை மேற்கூறிவாறு | ஆளணியினை் நிகழ்கால நிலைமைக்கு பொருந்தும் வகையில் திருத்தம் செய்து வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகையான பதவிகள் சம்பந்தமாக அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் |

மட்டத்திலுள்ள 06 பதவிகளில் 25 மிகை ஊழியர்களும் மற்றும் 12 பதவிகளில் 72 ஊழியர் வெள்றிடங்களும் காணப்பட்டன. மேலும் ஆரம்ப மட்டத்திலுள்ள 03 பதவிகளில் 30 ஊழியர் மிகைகளும் 12 பதவிகளில் 51 ஊழியர் வெற்றிடங்களும் காணப்பட்டன.

557 ஆக திருத்தம் செய்ய வேண்டும். வேண்டியதுடன் அது தொடர்பான வெற்றிடங்களின் எண்ணிக்கையும் 167 ஆக திருத்தம் செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டதுடன் பதவிப் பெயருக்கு இணங்க மிகைகள் மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை மாற்றமடையும்.